வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

வழக்கு சாட்சி PW 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜவேல் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : /2023 |

(எதிரிகள் முன்னிலையானார்கள்)

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரம்மாணம் செய்யப்பட்டார். 1973ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.
நாள் 01.08.2023.

முதல் விசாரணை

நான் தற்போது ஜெயமங்கலம் பிட்1ல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 21.1.2021ம் தேதியன்று மேல்மங்கலம் பிட் 1 கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன், மேல்மங்கலம் பிட்2ல் கிராம நிர்வாக அலுவலக கூடுதல் பொறுப்பு பார்த்தேன். 21.1.2021ம் தேதியன்று நான் மேல்மங்கலம் பிட்1ல் பணியில் இருந்தபோது, மதியம் சுமார் 1.30 மணியளவில் மேல்மங்கலம் பிட்2 கிராமநிர்வாக உதவியாளர் ஜமால் எனக்கு போன் செய்து, மேல்மங்கலத்திலிருந்து வைகைபுதுார் செல்லும் சாலையில் கிழக்கு பக்கமாக பாதி எரிந்த நிலையில் ஒரு பிரேதம் கிடப்பதாகச் சொன்னார். நானும், எனது கிராம உதவியாளர் ஜமாலும், சந்தானம் மனைவி உமாராணியின் தரிசு நிலத்தில் பொத்தகள்ளி முள் செடிக்கு கீழே ஆண் பிரேதம் எரிந்த நிலையில் பாதியாக கிடந்தது, இறந்தவர் யார் என அடையாளம் தெரியவில்லை. நானும், எனது கிராம உதவியாளர் ஜமாலும் ஜெயமங்கலம் காவல்

நிலையம் சென்று இதுகுறித்து காவல் உதவி ஆய்வாளரிடம் புகார் அளித்தோம். நான் காவல் நிலையத்தில் அளித்த புகார்தான் என்னிடம் காட்டப்படுவது, அதில் கையெழுத்து என்னுடையதுதான், அந்த புகார் அ.சா.ஆ.1. பின்னர் மறுநாள் போலீசார் என்னை அழைத்து, இறந்த நபர் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, தர்மராஜபுரத்தை சேர்ந்த பால்ராஜ் மகன் ஆனந்தராஜ் என தெரிவித்தனர். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

வைகைபுதூரிலிருந்து வடக்கே 7 கிமீ தொலைவில் மேல்மங்கலம் உள்ளது. மேல்மங்கலத்திலிருந்து தெற்கே 3 கிமீ தூரத்தில் ஜெயமங்கலம் உள்ளது. மேல்மங்கலம் என்னுடைய அலுவலத்திலிருந்து 2 கிமீ தொலைவில் வடுகபட்டி உள்ளது. சம்பவ இடம் மேல்மங்கலத்திலிருந்து வைகைபுதூர் ரோட்டில் கிழக்கு பக்கமாக எனது அலுவலகத்திலிருந்து 4 கிமீ தொலைவில் உள்ளது. வடுகபட்டி பஸ் நிலையத்திலிருந்து அரை கிமீ வடக்கே ஜெயந்தி காலனி உள்ளது. ஜெயந்தி காலனியில் சுமார் 300 வீடுகள் இருக்கும். வடுகபட்டியிலிருந்து வத்தலக்குண்டு வந்து விருவீடு செல்வதற்கு 40 கிமீ தூரமிருக்கும். விருவீட்டை ஒட்டிய பகுதிதான் தர்மராஜபுரம். வடுகபட்டியிலிருந்து திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் சுமார் 60 கிமீ தூரமிருக்கும். ஆத்தூருக்கு பக்கத்தில்தான் சொக்கலிங்கபுரம் என்ற இடம் இருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. ஆத்தூரை ஒட்டியே வடுகபட்டி வரும் சாலையில் பல பெட்ரோல் பங்குகள் உள்ளது. வத்தலக்குண்டிலும் பெட்ரோல் பங்குகள் உள்ளன, எத்தனை என்பது தெரியாது. வடுகபட்டியிலிருந்து வத்தலக்குண்டு பைப்பாஸ் போக வேண்டுமென்றால் தேவதானப்பட்டி பஸ் நிலையம் வழியாக செல்லலாம், தேவதானப்பட்டி ஊருக்குள் நுழையாமல் பைப்பாஸ் வழியாகவும் செல்லலாம். பிட் 2 கிராம நிர்வாக அலுவலராக தங்கமுத்து என்பவர் பணியில் இருந்தார். பிட்1–க்கு ராஜேந்திரன் என்பவர் உதவியாளராக பணியில் இருந்தார். என்னை பிட்2 கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பு அளித்து எந்த உத்தரவும் மேல்அதிகாரிகளால் பிறப்பிக்கவில்லை. நான் அலுவலகத்தில் இருக்கும்போது என்னுடைய உதவியாளர் ஜமால் ஒரு பிணம் எரிந்து கிடப்பதாக

போன் மூலம் தகவல் சொன்னார் என்ற விவரத்தை போலீசார் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேன். பின்னர் ஜமால் போனில் தகவல் சொன்ன பின்பு என்னை நேரில் வந்து சந்தித்தார். ஜமால் எத்தனை மணிக்கு சம்பவ இடத்தை பார்த்தார் என அவரை கேட்டேன். ஜமாலிடம் வாக்குமூலம் எழுதி வாங்கவில்லை. இதுபோன்ற நிகழ்வுகள் குறித்து தகவல் கொடுப்பவரிடம் அவர் சொல்லும் தகவலை பதிவு செய்து அவரிடம் கையெழுத்து பெற வேண்டுமென்றால் சரி. பதிவு செய்த தகவல் அடிப்படையில் நான் ஒரு அறிக்கை தயார் செய்ய வேண்டுமென்றால் சரி. அந்த அறிக்கையை நகல் எடுத்து, ஒன்றை காவல்துறைக்கும், மற்றொன்றை அந்த சரக நிர்வாக நடுவருக்கும், மற்றொன்றை என்னுடைய அலுவலக கோப்பிலும் வைத்து பராமரிக்க வேண்டும். அவ்வாறு நான் அறிக்கை எதுவும் சரக நிர்வாக நடுவருக்கு அனுப்பவில்லை. எனது அலுவலக உதவியாளர் ஜமாலுடன் சம்பவ இடத்திற்கு சென்றேன். என்னிடம் செல்போன் இருந்தது. சம்பவ இடத்திற்கு சென்று போன் மூலமாக போலீசாருக்கு தகவல் சொன்னேன். உடனே போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள். சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டு குறித்து கொண்டார்கள். வைகைபுதூரிலிருந்து மேல்மங்கலம் செல்லும் சாலைக்கு கிழக்கு பக்கம் சம்பவ இடம் உள்ளது. வைகைபுதூர், மேல்மங்கலம் சாலைக்கு இருபுறமும் போலீசார் பார்த்தனர். அங்கிருந்து போலீசார் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை. நான் சம்பவ இடத்தில் இருந்தபோது போலீஸ் துப்பறியும் நாய் வந்தது. துப்பறியும் நாய் ஓடிய திசையில் சென்று, போலீசார் சென்று 4, 5 பேர்களை சந்தேகத்தின்பேரில் அழைத்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு கிராம எல்கைக்குள் நடக்கின்ற அரசு திட்டங்கள், நலப்பணிகளை சென்று பார்வையிட்டு கண்காணிக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதி திட்ட வேலை நடந்து கொண்டிருந்தது. வைகைபுதூர் சாலையிலிருந்து கிழக்கு நோக்கி ஒரு மண்சாலை செல்வது என்றால் நினைவில்லை. மண் பாதை ஒட்டி வடபுரம் மாடுகள் வைத்து ஒரு பண்ணை இருக்கிறது என்றால் நினைவில்லை. சம்பவ இடம் உமாராணிக்கு சொந்தமானது. உமாராணி மற்றும் அவரது குடும்பத்தை சார்ந்தவர்களை நான்விசாரிக்கவில்லை. நானும், எனது கிராம உதவியாளரும்

குறிப்பாக கிராம உதவியாளர் கிராமத்தின் பகுதிகளை ரோந்து சென்று பார்க்க வேண்டும். ஜமால் தகவல் சொன்னதே ரோந்து போகும் போது பார்த்ததின் அடிப்படையில்தான். நான் போலீசில் கொடுத்த புகாரில் இந்த சம்பவத்திற்கு ஒருநாள் முன்பாக நடந்திருக்கலாம் என நினைக்கிறேன். அதற்கு முன்பாக அவ்வாறு ஒரு சம்பவம் நடந்திருந்தால் ரோந்து சென்ற உதவியாளர் எனக்கு தகவல் சொல்லியிருப்பார். நான் புகார் கொடுத்ததிலிருந்து போலீசார் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருவதும், போவதுமாக இருந்தார். சம்பவ இடத்திற்கு போலீசார் வருவதை பார்த்து அந்த பகுதியில் இருந்த மக்கள் அங்கு வந்தார்கள். அவ்வாறு வந்தவர்களிடம் போலீசார் விசாரித்தார்கள். அவர்கள் யாரும் சம்பவத்தை பற்றி தெரியாது என கூறிவிட்டார்கள். எனது கிராம உதவியாளர் ஜமால் சம்பவ இடத்திலிருந்து எனக்கு போன் செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு வேறு நபர் மூலம் சம்பவம் குறித்து தகவல் வந்தது என்றால் சரியல்ல. அ.சா.ஆ 1 புகார் நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் காவல் நிலையத்தில் அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

<u>மூன்று மற்றும் நான்காம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை தம்முடையதாக ஏற்றுக் கொண்டார்கள்.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்) P.கணேசன்
1.8.23
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

வழக்கு சாட்சி PW 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பால்ராஜ் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : /2023 |

<u>(எதிரிகள் முன்னிலையானார்கள்)</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரம்மாணம் செய்யப்பட்டார். 1973ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

நாள் 01.08.2023.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தர்மராஜபுரத்தில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். வழக்கில் இறந்துபோனவர் என் மகன் ஆனந்தராஜ். ஆஜர் எதிரிகளை தெரியும். கருப்பாயி எனது உடன்பிறந்த தங்கை, கருப்பாயிக்கு ஐந்து மகள்கள், ஒரு மகன். முதல் எதிரி விஜயசாந்தி மற்றும் மூன்றாம் எதிரி வித்யா ஆகிய இருவரும் என் தங்கை கருப்பாயின் மகள்கள். எனக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன். எனது மூத்த மகள் சுமதி, இளைய மகள் சுகந்தி, மகன் பெயர் ஆனந்தராஜ். என் ஆன்நதராஜ்க்கும், சுமதி மகள் லட்சுமியை திருமணம் செய்வதற்கு திருமணம் புதன்கிழமை 27ம் தேதி செய்ய ஏற்பாடு செய்திருந்தோம். எனது மகன் ஆனந்தராஜ் திருமணத்திற்கு பத்திரிக்கை அடித்தேன். என்னிடம் காட்டப்படும் திருமண பத்திரக்கைதான் எனது மகன் ஆனந்தராஜ் உடையது, அந்த திருமண பத்திரிக்கையின் அசல் அ.சா.ஆ.2. எனது மகன் தோட்டத்தில் கலர்மீன் பண்ணை வைத்துள்ளார். 18ம் தேதி தற்போது

இருந்து இரண்டு வருடத்திற்கு முன்னர் இரவு 8 மணிக்கு எனது மகன் பல்சர் இரு சக்கர வாகனத்தில் மீன் பண்ணைக்கு சென்றார். நான் மறுநாள் காலை 4.30 மணிக்கு தோட்டத்திற்கு சென்று பார்த்தபோது, என் மகன் ஆனந்தராஜை காணவில்லை. நான் மதுரைக்கு மீன்களுக்கு இரை வாங்க சென்றிருப்பான் என நினைத்திருந்தேன். ஆனந்தராஜின் செல்போனுக்கு தொடர்பு கொண்டபோது சுவிட்ச் ஆப் என வந்தது. மறுநாள் காலை 6 மணிக்கு எனது மகன் செல்போனுக்கு தொடர்பு கொண்டேன். அக்கம் பக்கத்தார்களை விசாரித்தபோது, என் மகன் வரவில்லை என சொன்னார்கள். நான் என் மகனை தேடி உறவினர்களுடன் வடுகபட்டியில் உள்ள எனது தங்கை வீட்டுக்கு வந்து விசாரித்தேன், அவர்கள் அங்கு வரவில்லை என கூறிவிட்டனர். நான் கருப்பாயி வீட்டுக்கு சென்று விசாரித்தபோது ஆஜர் முதல் எதிரி அங்கு இல்லை. என் மகன் ஆனந்தராஜ் வரவில்லை எனவும், ஆஜர் முதல் எதிரியை பற்றி விசாரித்தபோது, வேலைக்காக வெளியே சென்றிருப்பதாக சொன்னார்கள். நான் வடுகபட்டியிலிருந்து கிளம்பி விருவீடு காவல் நிலையம் வந்து என் மகனை காணவில்லை என புகார் கொடுத்தேன். விருவீடு போலீசார் என் தங்கை கருப்பாயியையும், அவரது குடும்பத்தினர்களையும் விசாரித்தனர். அவர்கள் எதுவும் தெரியாது என கூறிவிட்டார்கள். நான் விருவீடு காவல் நிலையத்தில் என் மகன் ஆனந்தராஜின் புகைப்படத்தை கொடுத்தேன். அதை அவர்கள் மற்ற காவல் நிலையங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். இரண்டு நாட்கள் கழித்து ஜெயமங்கலம் காவல் நிலையத்திலிருந்து போலீசார் என்னை தொடர்பு கொண்டு வைகைபுதூர் சாலையில் ஒரு ஆண் பிரேதம் கிடக்கிறது, வந்து பாருங்கள் என தகவல் சொன்னார்கள். நான், என் மைத்துனர் சின்னன், என் மருமகன் சின்னமாயன், மற்றொரு மைத்துனர் நாகத்தேவர் ஆகியோர்களுடன் வந்து பார்த்தேன். நானும், எனது உறவினர்களும் பிரேதத்தை பார்த்து அந்த பிரேதம் ஆனந்தராஜ் பிரேதம் என அடையாளம் காண்பித்தோம். பிரேதம் பாதி எரிந்த நிலையில் கை, கால்கள் பிய்ந்து கிடந்தது.பிரேதத்தின் காலில் இரும்பு ராடு இருந்தது. என் மகனுக்கு முன்பு ஏற்பட்ட விபத்தின்போது காலில் அறுவை சிகிச்சை செய்தபோது வைக்கப்பட்ட ராடு இருந்தது. எனது மகனின் பிரேதத்தில் செருப்பு

இருந்தது. என்,னிடம் காட்டப்படும் ஒருகால் செருப்பு என் மகன் ஆனந்தராஜின் செருப்பு, அந்த வாக்கர் ஒருகால் செருப்பு அ.சா.பொ.1. பின்னர் என் மகனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை முடித்து போலீசார் என்னிடம் ஒப்படைத்தார்கள். நான் என் மகனின் பிரேதத்தை நல்லடக்கம் செய்தேன். பின்னர் ஒருவாரத்திற்கு பின் ஜெயமங்கலம் போலீசார் என்னை தொடர்பு கொண்டு விஜயசாந்தி, வித்யா, பிரபாகரன், ஆசைப்பாண்டி ஆகிய நால்வரும் என் மகன் ஆனந்தராஜை கொலை செய்ததாக தெரிந்து கொண்டேன். எனது மகனும், முதல் எதிரி விஜயசாந்தியும் பழகினார்களா என்று எனக்கு தெரியாது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது குடும்பத்திற்கும், எனது தங்கை குடும்பத்திற்கும் எட்டு வருடங்களாக பகை. அதனால் இரு குடும்பத்திற்கும் இடையே பேச்சு வார்த்தை மற்றும் போக்குவரத்து இல்லை. எனது தங்கை கருப்பாயி வீட்டுக்கு சென்று, எனது மகனை விசாரித்தேன் என்றும், அப்போது முதல் எதிரி அங்கு இல்லை என்றும், மேலும் முதல் எதிரியை பற்றி கேட்டபோது, அவர் வேலைக்கு சென்று விட்டதாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. எங்கள் பகுதியில் நிறைய பேர் மீன் பண்ணை வைத்துள்ளார்கள். அவ்வாறு மீன் பண்ணை வைத்துள்ளவர்களுக்கு நான்தான் தலைவர். பண்ணை மீன்களை சென்னை மற்றும் கேரளாவிற்கு அனுப்புகிறார்கள். மீன் வியாபாரம் செய்வதில் எங்களுக்குள் வியாபார போட்டி இல்லை. எனது மகன் தங்க செயின் அணிந்திருந்தார். சம்பவம் நடந்த இடத்திற்கு நான் ஒருதடவைதான் சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது, அங்கு போலீசார் மற்றும் ஊர் மக்கள் இருந்தார்கள். சம்பவ இடத்தில் பிரேதத்தை நான் பார்த்த அன்று போலீசார் என்னை மகனுடைய பைக்கை காட்டினார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்ற அன்று சம்பவம் பற்றி போலீசாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று தெரியாது. அசாபொ1 எரிந்துபோனசெருப்புதான், அதன் உண்மையான நிறம் தெரியவில்லை. அசாபொ1 செருப்பு என் மகனுடையது என உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான்கு எதிரிகளும் குற்றத்தை ஒப்புக்

கொண்டதாக கேள்விப்பட்டேன். புகார் கொடுத்த பின்பு விருவீடு போலீசார் அழைத்து விசாரித்தார்கள்.

<u>மூன்று மற்றும் நான்காம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை தம்முடையதாக ஏற்றுக் கொண்டார்கள்.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்) P.கணேசன்
1.8.23
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

வழக்கு சாட்சி PW 3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிவராஜ் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : /2023 |

(எதிரிகள் முன்னிலையானார்கள்)

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரம்மாணம் செய்யப்பட்டார். 1973ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.
நாள் 01.08.2023.

முதல் விசாரணை

நான் தற்போது தர்மராஜபுரத்தில் குடியிருக்கிறேன். மீன் பண்ணை வைத்துள்ளேன். அசா2 பால்ராஜ் எனது பெரியப்பா. வழக்கில் இறந்துபோனவர் எனது பெரியப்பா பால்ராஜின் மகன் ஆனந்தராஜ். ஆஜர் எதிரிகளை தெரியும். என் பெரியப்பா மகன் ஆனந்தராஜ்க்கும், அவரது அக்கா சுமதியின் மகள் லட்சுமிக்கும் 27.1.2021ம் தேதி திருமணம் செய்ய ஏற்பாடகி இருந்தது. 18.1.2021ம் தேதி மீன்பண்ணைக்கு சென்ற எனது அண்ணன் ஆனந்தராஜ் திரும்பி வரவில்லை என எனது பெரியப்பா பால்ராஜ் செல்போனில் தகவல் எனக்கு தகவல் சொன்னார். நான் என் நண்பர்கள் வட்டத்திலும் மற்றும் உறவினர்களிடமும் விசாரித்தும், வடுகபட்டியில் உள்ள எனது அத்தை கருப்பாயி வீட்டிலும் விசாரித்தோம். வடுகபட்டியில் கருப்பாயி வீட்டில் விசாரித்தபோது நான் நேரில் சென்றிருந்தேன். என் அத்தை ஆனந்தராஜ் இங்கு வரவில்லை என கூறினார். என் அத்தை கருப்பாயி வீட்டில் அவரது கணவர்

முருகன் மற்றும் அவரது மகன் விஜய் மட்டும் இருந்தார்கள். ஆஜர் முதல் எதிரியை விசாரித்தபோது, வெளியில் போயிருப்பதாக கூறினார்கள். நான் காத்திருந்த பார்த்தோம், ஆனால் அவர் வரவில்லை. பின் நாங்கள் அங்கிருந்து விருவீடு காவல் நிலையம் வந்தோம். எனது பெரியப்பா பால்ராஜ் எனது அண்ணன் ஆனந்தராஜை காணவில்லை என புகார் கொடுத்தார், நான் அப்போது உடனிருந்தேன். இரண்டு நாட்களுக்கு பின் ஜெயமங்கலம் காவல் துறையினர் எனது பெரியப்பா பால்ராஜ்க்கு போன் செய்து தங்கள் சரகத்தில் அடையாளம் தெரியாத ஒரு ஆண் பிரேதம் இருப்பதாகவும், வந்து அடையாளம் காட்ட அழைத்ததாகவும், எனக்கு தகவல் சொன்னார். நானும், எனது உறவினர்களும் ஜெயமங்கலம் காவல் நிலையம் வந்தோம். போலீசார் எங்களை பிரேதம் கிடந்த இடத்திற்கு அழைத்து சென்றார்கள். பிரேதம் வைகைபுதுார் போகும் ரோட்டில் கரட்டின் அருகில் கிடந்தது. பிரேதம் பாதி எரிந்த நிலையில் கிடந்தது. பிரேதத்தில் முகத்தில் காணப்பட்ட தழும்பு, பிரேதத்தின் காலில் இருந்த செருப்பையும் வைத்து அது எனது அண்ணன் ஆனந்தராஜின் பிரேதம் என்று நினைத்தோம். நானும், இறந்துபோன எனது அண்ணன் ஆனந்தராஜ்ம் ஒன்றாக சேர்ந்து ஒரே மாதிரியாக செருப்பை வாங்கி பயன்படுத்தி வந்தோம். என்னிடம் காட்டப்படும் ஒருகால் செருப்புதான் எனது அண்ணன் ஆனந்தராஜ் உடையது. பிரேதம் இரண்டு பகுதிகளாக கிடந்தது. செருப்பு காலில் இல்லாமல் எரிந்த நிலையில் தரையில் கிடந்தது. பின் என் அண்ணன் பிரேதத்தை விசாரணைக்கு பின் பெற்று அடக்கம் செய்தோம். பின் ஜெயமங்கலம் போலீசார் 25.1.21ம் தேதி ஜெயமங்கலம் போலீசார் எதிரிகளை அடையாளம் காட்டும் பொருட்டு என்னை அழைத்தார்கள். நான் அன்று இரவே ஜெயமங்கலம் காவல் நிலையம் வந்தேன். மறுநாள் காலை அதிகாலையில் நாங்கள் வடுகபட்டி பைப்பாஸில் இருந்தபோது ஆஜர் 2ம் எதிரி பிரபாகரன், ஆஜர் 1ம் எதிரி விஜயசாந்தியை ஏற்றிக் கொண்டு ஸ்பிளன்டர் இரு சக்கர வாகனத்தில் வந்தார்கள். நான் எதிரிகளை அடையாளம் காட்டினேன். போலீசார் அவர்களை கைது செய்து விசாரித்தபோது எதிரிகள் வழக்கு சம்பவத்தை செய்ததாக ஒப்புக் கொண்டார்கள். ஆனந்தராஜ்க்கும், முதல் எதிரி விஜயசாந்திக்கும் பழக்கம் இருந்தது. எவ்வளவு நாட்களாக

அவர்களுக்குள் பழக்கம் இருந்தது என்பது தெரியாது. லட்சுமிக்கும், ஆனந்தராஜக்கும் கல்யாண ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த கல்யாண ஏற்பாடு பிடிக்காததால் விஜயசாந்தி ஆனந்தராஜை கொலை செய்ததாக தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நானும், எனது பெரியப்பாவும் வடுகபட்டியில் எனது அத்தை கருப்பாயி வீட்டுக்கு சென்று ஆனந்தராஜை பற்றி விசாரித்ததை போலீசார் விசாரணையில் சொன்னேன். கருப்பாயி வீட்டில் ஆனந்தராஜை விசாரித்தபோது, விஜயசாந்தி அங்கு இல்லை, விஜயசாந்தி வருவார் என காத்திருந்தோம், அவர் வரவில்லை என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்று ஞாபகமில்லை, விருவீடு காவல் நிலையத்தில் புகார் அளிக்க நான் உடன் சென்றேன். அந்த புகாரில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. விருவீடு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து நகல் கொடுத்தார்கள். விருவீடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இரண்டு நாட்கள் கழித்து எங்களை கூப்பிட்டார்கள். சம்பவ இடத்திற்கு வடக்கு பக்கம் மண் பாதை கிழக்கு நோக்கி செல்கிறது. அந்த பாதை எங்கு சென்று முடிகிறது என்று எனக்கு தெரியாது. அந்த மண் பாதை 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் போட்ட பாதை அல்ல. பிரேதத்தில் தழும்பு இருந்தது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. அசாபொ1 வாக்கர் செருப்பை பல பேர் உபயோகப்படுத்துவார்கள். நான் சொல்லியவாறு சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், எதிரிகளை கைது செய்ய செல்லவில்லை என்றால் சரியல்ல.

<u>மூன்று மற்றும் நான்காம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை தம்முடையதாக ஏற்றுக் கொண்டார்கள்.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்) P.கணேசன்
1.8.23
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

வழக்கு சாட்சி PW 4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுமதி | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : /2023 |

(எதிரிகள் முன்னிலையானார்கள்)

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரம்மாணம் செய்யப்பட்டார். 1973ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.
நாள் 01.08.2023.

முதல் விசாரணை

நான் சென்னையில் விநாயகபுரத்தில் குடியிருக்கிறேன். மீன் பண்ணை தொழில் செய்து வருகிறேன். அசா2 பால்ராஜ் என் அப்பா. வழக்கில் இறந்துபோனவர் என் தம்பி ஆனந்தராஜ். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடன் பிறந்தவர்கள் என் தங்கை சுகந்தி, தம்பி ஆனந்தராஜ். என் தம்பி ஆனந்தராஜ்க்கும், எனது மகள் லட்சுமிக்கும் 27.1.21ம் தேதி திருமணம் செய்வதாக ஏற்பாடு செய்திருந்தோம். என்னிடம் காட்டப்படும் அசாஆ 2 திருமண பத்திரிக்கை என் தம்பி மற்றும் மகளின் திருமணத்திற்காக அடிக்கப்பட்டதுதான். திருமண பத்திரிக்கையை ஊரில் உள்ளவர்களுக்கு கொடுத்து விட்டோம். கடந்த 15.1.21ம் தேதி ஆஜர் முதல் எதிரி எனக்கு போன் செய்து என் தம்பி ஆனந்தராஜ்க்கு எனது மகள் லட்சுமியை திருமணம் செய்து வைக்கக் கூடாது எனவும், என்னை மீறி எப்படி திருமணம் செய்வீர்கள் என்று பார்க்கலாம், திருமணம் செய்தால் ஆனந்தராஜை காணாபிணம்

ஆக்கி விடுவோம் என முதல் எதிரி சொன்னார். இது குறித்து என அப்பா, அம்மாவிடம் சொன்னேன். அவர்கள் வீட்டில் பெண் எடுக்கவில்லை என்பதால் அவ்வாறு சொல்வார்கள், திருமணம் முடிந்தால் சரியாகி விடும் என்று சொன்னார்கள். 18 ம் தேதியிலிருந்து என் தம்பி ஆனந்தராஜ் மீன் பண்ணைக்கு செல்வதாக சொல்லி சென்றவர் காணவில்லை. எங்கள் சொந்தக்காரர்களை கூட்டிச் சென்று ஆனந்தராஜை பற்றி விசாரித்தோம். வடுகபட்டியில் உள்ள என் அத்தை கருப்பாயி வீட்டுக்கு சென்று என் அப்பா மற்றும் உறவினர்கள் சென்று விசாரித்தார்கள். அவர்கள் தெரியாது என்று கூறிவிட்டார்கள். பின் விருவீடு காவல் நிலையத்தில் என் தம்பி ஆனந்தராஜை கண்டுபிடித்து தருமாறு என் அப்பா பால்ராஜ் புகார் அளித்தார். 2, 3 நாட்களுக்கு பின் ஜெயமங்கலம் போலீசார் என் அப்பா பால்ராஜ்க்கு போன் செய்து அடையாளம் தெரியாத ஆண் பிரேதம் ஒன்று இருப்பதாகவும், வந்து அடையாளம் காட்ட கூப்பிட்டதாக தகவல் சொன்னார். என் அப்பாவும், உறவினர்களும் சென்று பார்த்தார்கள். பிரேதம் என் தம்பி ஆனந்தராஜ் உடையது என்று அடையாளம் காண்பித்தார்கள். பின் என் தம்பி ஆனந்தராஜின் பிரேதத்தை பெற்று நல்லடக்கம் செய்தோம். என் மகளை என் தம்பி ஆனந்தராஜ் திருமணம் செய்யக் கூடாதென என்ற காரணத்திற்கான எதிரிகள் வழக்கு சம்பவத்தை செய்துள்ளார்கள். பின் ஆஜர் எதிரிகள்தான் வழக்கு சம்பவத்தை செய்ததாக போலீசார் அவர்களை கைது செய்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் சென்னையில் குடியிருக்கிறேன். 15.1.21 ம் தேதியன்று நான் சென்னையில் இருந்தேன். முதல் எதிரி எனக்கு மாலை 4 மணிக்கு போன் செய்தார். சுமார் 5 நிமிடம் பேசியிருப்பார். நான் முதல் எதிரியிடம் எந்த காலத்திலும் பேசியதில்லை. அதனால் என்னுடைய போன் நம்பர் முதல் எதிரிக்கு தெரியாது. போலீசார் விசாரித்தபோது, இரண்டு நாளைக்கு முன்பு போன் செய்ததாக சொன்னேன். 15.1.21 அன்று போன் செய்ததாக சொல்லவில்லை. முதல் எதிரி போன் செய்தவுடன் எனக்கு பயம் இருந்தது, அதை என் பெற்றோர்களிடம் சொன்னேன்.

அது சம்பந்தமாக போலீசாரிடம் புகார் கொடுத்துள்ளேன். முதல் எதிரி எனக்கு எந்த காலத்திலும் போன் செய்து மிரட்டல் விடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. போலீசார் எங்களுடைய எல்லோருடைய போன் நம்பரையும் கேட்டு வாங்கினார்கள். எனது மகள் லட்சுமிக்கு தனியாக போன் இல்லை.

மூன்று மற்றும் நான்காம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை தம்முடையதாக ஏற்றுக் கொண்டார்கள்.

எசாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்) P.கணேசன்
1.8.23
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

வழக்கு சாட்சி PW 5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லட்சுமி | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : /2023 |

(எதிரிகள் முன்னிலையானார்கள்)

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரம்மாணம் செய்யப்பட்டார். 1973 ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

நாள் 01.08.2023.

முதல் விசாரணை

நான் சென்னையில் விநாயகபுரத்தில் குடியிருக்கிறேன். நான் மூன்றாமாண்டு கல்லூரியில் படித்து வருகிறேன். அசாஆ 4 சுமதி என் அம்மா. வழக்கில் இறந்துபோனவர் என் தாய்மாமா ஆனந்தராஜ். ஆஜர் எதிரிகளை தெரியும். என் அம்மாவுடன் பிறந்தவர் என் சித்தி சுகந்தி, என் மாமா ஆனந்தராஜ். என் மாமா ஆனந்தராஜ் மீன்பண்ணை வைத்திருந்தார். ஜனவரி 27 ம் தேதி எனக்கும், என் மாமா ஆனந்தராஜ்க்கும் திருமணத்திற்கான ஏற்பாடு நடைபெற்று வந்தன. திருமணத்திற்காக பத்திரிக்கைகள் அச்சிடப்பட்டு உறவினர்களுக்கு கொடுத்திருந்தோம். என்னிடம் காட்டப்படும் பத்திரிக்கைதான் திருமணத்திற்காக

அச்சிடப்பட்டது. அது ஏற்கனவே அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டது. திருமணத்திற்கு முன்பாக ஆஜர் முதல் எதிரி என் அம்மாவுக்கு போன் செய்து எனது மாமா ஆனந்தராஜ் அவருடன் பேசிக் கொண்டிருந்ததாகவும், ஆனந்தராஜை நான் திருமணம் செய்து கொள்ளக் கூடாதெனவும், மீறி திருமணம் செய்தால் ஆனந்தராஜை காணாபிணம் ஆக்கிவிடுவேன் என மிரட்டியதாக எனது அம்மா என்னிடம் கூறினார். எனது அம்மா, எனது தாத்தா பால்ராஜ், பாட்டி சரஸ்வதி போன் செய்து தகவலை சொன்னார். எதோ கோபத்தில் சொல்கிறார்கள், திருமணம் முடிந்தால் சரியாகி விடுமென என் தாத்தா பாட்டி கூறினார்கள். 18ம் தேதி மீன் பண்ணைக்கு சென்ற மாமா ஆனந்தராஜ் காணவில்லை என தகவல் வந்ததாக என் அம்மா என்னிடம் கூறினார். என் மாமா காணாமல் போனது சம்பந்தமாக என் தாத்தா பால்ராஜ் விருவீடு காவல் நிலையத்தில புகார் அளித்துள்ளதாக என்னிடம் கூறினார்கள். ஜெயமங்கலம் காவல் நிலையத்திலிருந்து என் தாத்தா பால்ராஜ்க்கு போன் செய்து அடையாளம் தெரியாத ஆண் பிரேதம் உள்ளது, அடையாளம் காட்ட வருமாறு அழைத்ததாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் சென்னையிலிருந்தேன், விருவீட்டுக்கு வரவில்லை. முதல் எதிரி எனது அம்மாவிற்கு போன் பேசி மிரட்டிய விவரத்தை என் அப்பாவிடம் சொல்லவில்லை, என் அப்பா பெயர் தங்கராஜ். எனது அப்பா தங்கராஜ் சென்னையிலிருந்து மீன் வியாபாரம் செய்கிறார். விஜயசாந்தி எனது அம்மாவிடம் போனில் என்ன சொன்னார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. எதிரிகளை

இந்த வழக்கிற்கு வந்த பின்னர்தான் போலீசார் சொல்லி தெரியும். முதல் எதிரி எனது அம்மாவிற்கு போன் செய்து மிரட்டவில்லை என்றும், மிரட்டியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் எதிரி மிரட்டியது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

மூன்று மற்றும் நான்காம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை தம்முடையதாக ஏற்றுக் கொண்டார்கள்.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்) P.கணேசன்
1.8.23
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.